# நீதித்துறை நடுவர் நீதிமன்றம்,

# திருவாரூர்

# CC No. 25/2020

2022-ம் ஆண்டு ஏப்ரல் மாதம் 08-ம் நாள் குற்றமுறையீட்டாளர்/எதிரி தரப்பில் சாட்சி அ..சா.36-ன் சாட்சிய வாக்குமூலம் 1969-ம் சட்டத்தின்படி குற்றவியல் நீதித்துறை நடுவர் அவர்களால் ஆணையுறுதி செய்யப்பட்டது.

| | | | |
|---|---|---|---|
| பெயர் | ஜெய்சங்கர் | வயது | 36/2022 |
| தகப்பனார் பெயர் | சாமிநாதன் | ஜாதி | |
| தொழில் | தனியார் கம்பெனியில் வேலை | மதம் | |
| ஊர் | மேலராதாநல்லூர், கண்கொடுத்தவனிதம் | தாலுக்கா | கூத்தாநல்லூர் தாலுக்கா, திருவாரூர் மாவட்டம். |

**முதல் விசாரணை (அரசு தரப்பில்)**

நான் மேலராதாநல்லூரில் வசித்து வருகிறேன். நான் தனியார் கம்பெனியில் அக்கவுண்டண்டாக வேலை செய்கிறேன். ஆஜர் எதிரிகளில் 1ம் எதிரி சக்திவேலை தெரியும். நான் பி.காம்., படித்துள்ளேன். சென்னை உயர்நீதிமன்றத்தில் ஆபீஸ் அஸிஸ்டெண்ட் வேலை உள்ளதாக 1ம் எதிரி சொன்னார். அதற்கு ரூ.2 லட்சம் வேண்டும் என்றும், முன்பணமாக ரூ.1 லட்சம் ரூபாய் கொடுக்க வேண்டும் என்றும் சொன்னார் நாங்கள் மூன்று நபர்கள் கொடுத்தோம். எனக்கு, எனது மனைவி சர்மிளாதேவி, மனைவி தங்கை ஜெயசூர்யா ஆகியோரர்களுக்காக தலா ரூ.1 லட்சம் வீதம் ரூபாய் 3 லட்சம் ரூபாயை 1ம் எதிரியிடம் கொடுத்தோம். 2018 ம் வருடம் பிப்ரவரி மாதம் 1ம் எதிரியின் வீட்டில் வைத்து கொடுத்தோம். நான் பணம் கொடுக்கும்போது சக்திவேல் மட்டும் வீட்டில் இருந்தார். வேலை 2 மாதத்தில் உறுதியாகிவிடும், பிறகு மீத தொகையை கொடுக்க வேண்டும் என்று சொன்னார். நாங்கள் கொஞ்சநாள் வெயிட் செய்தோம். வேலை சம்பந்தமாக கேட்டபோது வெயிட் பண்ணுங்கள் என்று சொன்னார், தொடர்பு கொள்கிறேன் என்று சொன்னார். பின்னர் காவல் நிலையத்தில் இருந்து தொடர்பு கொண்டார்கள்.

அப்பொழுது பணம் கொடுத்த விபரத்தையும், எங்களது டாக்குமெண்ட் கொடுத்த விபரத்தையும் சொன்னேன். போலிஸ் விசாரணையில் சுரேஷ் என்பவர் புகார் கொடுத்த விபரம் தெரிந்துக்கொண்டேன். பணம் கொடுத்ததை மோசடி செய்துவிட்டார்கள் என்று தெரிந்துக்கொண்டேன். போலிசார் என்னை விசாரித்தார்கள்.

**கு.வி. (1ம் எதிரி தரப்பில்)**

நீதிமன்றத்தில் வேலை வாங்கிதருவதாக 1ம் எதிரி சக்திவேல் தகவல் கொடுத்து எனது மாமனார் என்னிடம் சொன்னார். பிறகு சக்திவேல் என்னிடம் போனில் பேசினார். எந்த தேதியில் போனில் பேசினார் என்றால் தேதி ஞாபகம் இல்லை. காவல் துறை விசாரணையில் மூன்று நபர்களுக்காக பணம் கொடுத்ததாக சொல்லியுள்ளேன் அவர்கள் யார் என்றால் நான், எனது மனைவி சர்மிளாதேவி, எனது மனைவியின் தங்கை ஜெயசூர்யா ஆகியோர்களுக்காக கொடுத்தோம். எத்தனை நபர்கள் 1ம் எதிரிவீட்டில் சென்று பணம் கொடுத்தீர்கள் என்றால் நானும், எனது மாமனாரும் போய் கொடுத்தோம். காவல் துறையினர் என்னை போனில் தொடர்பு கொண்டபோது நான் கோயமுத்தூரில் வேலை பார்த்து வந்தேன். எப்பொழுது என்றால் ஞாபகம் இல்லை. சக்திவேல் அவருக்கு தெரிந்த நபர் கோர்ட்டில் உள்ளதாகவும், அவர்மூலமாகவும் வேலை வாங்கி தருவதாக சொன்னார். சக்திவேலிடம் விசாரிக்கும் யார் மூலமாக வேலை வாங்கி தருவதாக சொன்னார் என்ற விபரம் தெரிந்துகொண்டீர்களா என்றால் யார் மூலம் என்பதை அவர் தெரிவிக்கவில்லை. நான் சக்திவேலை முன்ன,பின்ன பார்க்கவில்லை என்றால் சரியல்ல. நான் 1ம் எதிரி சக்திவேலை முன்ன,பின்ன பார்த்ததில்லை பொய்யாக சாட்சியமளிக்கிறேன் என்றால் சரியல்ல. நான் தனிபட்ட புகார் எதுவும் கொடுக்கவில்லை என்றால் சரிதான். அவர் வேலை வரும் என்று சொன்னதால் வெயிட் பண்ணிக்கொண்டு இருந்தேன்.

**கு.வி. (2 ம் எதிரி தரப்பில்)**

**குறுக்கு விசாரணை இல்லை என்று வழக்கறிஞரால் சொல்லப்பட்டது.**

## நீதித்துறை நடுவர் நீதிமன்றம்,

## திருவாரூர்

# CC No. 25/2020

2022-ம் ஆண்டு ஏப்ரல் மாதம் 08-ம் நாள் குற்றமுறையீட்டாளர்/எதிரி தரப்பில் சாட்சி அ..சா.37-ன் சாட்சிய வாக்குமூலம் 1969-ம் சட்டத்தின்படி குற்றவியல் நீதித்துறை நடுவர் அவர்களால் ஆணையுறுதி செய்யப்பட்டது.

| | | | |
|---|---|---|---|
| பெயர் | வீரராஜன் | வயது | 29/2022 |
| தகப்பனார் பெயர் | துரை | ஜாதி | |
| தொழில் | தனியார் கம்பெனியில் வேலை | மதம் | |
| ஊர் | மன்னார்குடி | தாலுக்கா | மன்னார்குடி |

**முதல் விசாரணை (அரசு தரப்பில்)**

நான் மன்னார்குடியில் வசித்து வருகிறேன். நான் தனியார் கம்பெனியில் வேலை செய்கிறேன். ஆஜர் எதிரிகளில் 1ம் எதிரி சக்திவேலை தெரியும். நான் பி.ஈ., படித்துள்ளேன். எங்களது குடும்ப நண்பர் ரமேஷ் என்பவர் மூலமாக 1ம் எதிரி அறிமுகமானார். அப்பொழுது கோர்ட்டில் வேலை உள்ளது. வாங்கி தருகிறோம் என்றும், ஆபீஸ் அஸிஸ்டெண்ட் வேலை உள்ளது என்று 1ம் எதிரி ரமேஷின் ஸ்டுடியோவில் நேரடியாக என்னிடம் சொன்னார். அந்த வேலைக்கு ரூ.2 லட்சம் கொடுக்க வேண்டும் என்றும், நான் எனக்கும் எனது தங்கை ராகிணிக்கும் சேர்த்து ரூ.2 லட்சம் பணம் முன்பணமாக 2018 ம் வருடம் பிப்ரவரி மாதம் சக்திவேல் வீட்டில் நானும், ரமேஷிம் சேர்ந்து போய் கொடுத்தோம். அப்பொழுது என்னுடைய சர்டிபிகேட்டையும் கொடுத்தோம். அதற்கு பிறகு கேட்டபோது காலம் தாழ்த்தி வந்தார். 6 மாதம் ஆகியும், வேலை வராததால் ரமேஷ் என்பவரை தொடர்பு கொண்டு கேட்டேன். அப்பொழுது சக்திவேல் வேலை வந்துவிடும் என்று கூறினார். பிறகு தொடர்பு கொண்டு இருந்தேன், சக்திவேல் தரப்பில் இருந்து எந்த தகவலும் இல்லை. அதற்கு பிறகு 2019-ல் எஸ்.பி. அலுவலகத்தில் இருந்து என்னை தொடர்பு கொண்டு பணம் கொடுத்துள்ளீர்களா என்று கேட்டார்கள். பணம் கொடுத்தேன் என்று சொன்னேன். அப்பொழுது நாங்கள் அல்லாமல் வேறு நபர்களிடமும் பணம்

வாங்கியுள்ளதாக சொன்னார்கள். அதற்கு பிறகு காவல் துறையினர் விசாரிக்க வர சொன்னார்கள். போலிசார் என்னை விசாரித்தார்கள்.

**கு.வி. (1ம் எதிரி தரப்பில்)**

தொகை கேட்டு நீதிமன்றத்திலோ, அல்லது காவல் துறையிலோ ஏதாவது புகார் கொடுத்தேனா என்றால் இல்லை. எந்த தேதியில் பணம் கொடுத்தீர்கள் என்றால் தேதி ஞாபகம் இல்லை. ஆக நான் ரூ.2 லட்சம் கொடுத்துள்ளேன் என்றால் ஆமாம். பணம் கொடுக்கும்போது யாரை அழைத்து சென்றேன் என்றால் ரமேஷ் என்பவரை அழைத்து சென்ளேன். போலிஸ் விசாரணையில் ரூ.2 லட்சம் கொடுத்ததாக சொல்லப்படவில்லை என்றால் சரிதான், அப்படி என்றால் நான் பொய் சொல்கிறேன் என்றால் சரியல்ல. நான் பணம் கொடுத்திருந்தால் புகார் கொடுத்திருக்க வேண்டும் என்றால் அவர் கொடுத்துவிடுவார் என்பதால் புகார் ஏதும் கொடுக்கவில்லை. நான் முன்னுக்கு பின் முரணாக சாட்சியம் அளிப்பதால் எனது சாட்சியம் ஏற்றக்கொள்ளத்தக்கதல்ல என்றால் சரியல்ல. என்ன சம்பவம் நடைபெற்றது என்பது எனக்கு தெரியாது பொய் சாட்சியம் அளிக்கிறேன் என்றால் சரியல்ல.

**கு.வி. (2 ம் எதிரி தரப்பில்)**

**குறுக்கு விசாரணை இல்லை என்று வழக்கறிஞரால் சொல்லப்பட்டது.**

# நீதித்துறை நடுவர் நீதிமன்றம்,

# திருவாரூர்

# CC No. 25/2020

2022-ம் ஆண்டு ஏப்ரல் மாதம் 08-ம் நாள் குற்றமுறையீட்டாளர்/எதிரி தரப்பில் சாட்சி அ..சா.38-ன் சாட்சிய வாக்குமூலம் 1969-ம் சட்டத்தின்படி குற்றவியல் நீதித்துறை நடுவர் அவர்களால் ஆணையுறுதி செய்யப்பட்டது.

| | | | |
|---|---|---|---|
| பெயர் | ஜாய் மார்ட்டின் | வயது | 39/2022 |
| தகப்பனார் பெயர் | ஆரோக்கியசாமி | ஜாதி | |
| தொழில் | சொந்த வேலை | மதம் | |
| ஊர் | மாதாகோவில் தெரு, தாணிகோட்டகம். | தாலுக்கா | வேதாரண்யம் |

**முதல் விசாரணை (அரசு தரப்பில்)**

நான் தாணிக்கோட்டகத்தில் வசித்து வருகிறேன். நான் சொந்தமாக செங்கல் சூலை தொழில் செய்து வருகிறேன். ஆஜர் எதிரிகளில் 1ம் எதிரி சக்திவேலை தெரியும். நான் பி.ஏ., பி,எட்., படித்துள்ளேன். மன்னார்குடியில் வசித்து வரும் ரமேஷ் என்பவர் எனக்கு நண்பர். அவர் அரசு வேலை சக்திவேல் என்பவர் மூலமாக வாங்கி தருவதாக சொன்னார். 1ம் எதிரி பணம் கட்டினால் உடனடியாக கோர்ட்டில் கிளார்க் வேலை வாங்கி தருவதாக சொன்னார். உடனடியாக ரூ.1லட்சம் ரூபாயை பிப்ரவரி மாதம் 2018-ல் சக்திவேல்வீட்டில் போய் கொடுத்தேன். நானும், ரமேஷ் மற்றும் டெய்லர் என்கிற பாலசுப்பிரமணியன் ஆகியோர் சென்று கொடுத்தோம். அப்போது அவரது வீட்டில் சக்திவேல், அவரது மனைவி, அவரது அம்மா, அப்பா இருந்தார்கள். என்னுடைய படிப்பு சம்பந்தமான ஆவணங்கள் கொடுத்தேன். வேலையை எனது சொந்த மாவட்டமான நாகப்பட்டிணத்திலோ அல்லது சென்னையிலோ வாங்கி தருவதாக சொன்னார். காலதாமதம் ஆனதால் நான் தொடர்பு கொண்டு கேட்டபோது பிப்ரவரி மாதம் கொடுத்துள்ளீர்கள், ஏப்ரல், மே மாதம் லீவு என்பதால் வேலை கிடைக்கும் என்று சொன்னார். நான் 1ம் எதிரியை தொடர்பு கொண்டபோது நானே தொடர்பு கொள்கிறேன், அடிக்கடி தொடர்பு கொண்டு தொல்லை செய்யாதீர்கள் என்று சொன்னார். பின்னர் எஸ்.பி. ஆபீஸில்

இருந்து என்னிடம் கால் செய்து விபரம் கேட்டார்கள். பணம் கொடுத்த விபரத்தை சொன்னேன். போலிசார் போன் மூலமாகவே விசாரித்தார்கள். அப்பொழுது தெரிந்துக்கொண்டேன். என்னை போல பலநபர்களிடம் பணம் வாங்கியுள்ளார் என்ற விபரம் தெரிந்துக்கொண்டேன்.

**கு.வி. (1ம் எதிரி தரப்பில்)**

போலிசார் என்னை நேரடியாக விசாரணை செய்யவில்லை என்றால் சரிதான். எந்த தேதியில் பணம் கொடுத்தேன் என்றால் 19ம் தேதி என்று நினைக்கிறேன். பிப்ரவரி மாதம் 2018-ல் கொடுத்தேன். பணம் கொடுத்ததிருக்கான ஆதாரம் ஏதாவது தாக்கல் செய்துள்ளேனா என்றால் இல்லை. ரமேஷ் என்பவரை எப்படி தெரியும் என்றால் அவர் எனது குடும்ப நண்பர். ரமேஷ்தான் முதலில் சக்திவேலை பார்த்தால் வேலை கிடைக்கும் என்று சொன்னார். சக்திவேல் என்பவர் அரசாங்கவேலையில் உள்ளார் என்றால் அதுபற்றி தெரியாது. சக்திவேலுக்கு தெரிந்த நபர் அரசாங்க வேலையில் உள்ளதாக சொல்லி தெரிந்துக்கொண்டேன். தெரிந்த நபர் யார் என்று கேட்டு தெரிந்து கொண்டீர்களா என்றால் கோர்ட்டில் வேலை செய்கிறார் என்று சொன்னார். எந்த கோர்ட்டில் வேலை செய்வதாக தெரிந்து கொண்டீர்கள் என்றால் சென்னை, மயிலாடுதுறையில் வேலை செய்வதாக சொன்னார். எங்கு வேலை வாங்கி தருவதாக சொன்னார் என்றால் சென்னையில் சொன்னார், எனக்கு தூரம் என்று சொன்னேன், அதனால் நாகப்பட்டிணத்தில் வாங்கி தருவதாக சொன்னார். யாருடன் சென்று பணம் கொடுத்தீர்கள் என்றால் நான், ரமேஷ், டெய்லர் (எ) பாலசுப்பிரமணியன் என்பவர்களுடன் சென்று பணம் கொடுத்தோம். டெய்லர் என்பவர் ரமேஷின் நண்பர். எத்தனை மணிக்கு 1ம் எதிரியின் வீட்டிற்கு சென்றீர்கள் என்றால் காலை 9.30 மணிக்கு சென்றேன். நான் போகும்போது 1ம் எதிரி சக்திவேல், அவரது மனைவி, அவரது அம்மா, ஒரு வயதான நபர் இருந்தார். வேலை கிடைக்கவில்லை என்று மோசடி செய்து விட்டார் என்று தனியாக புகார் ஏதாவது கொடுத்துள்ளேனா என்றால் இல்லை. ஆஜர் எதிரி சக்திவேல் பணம் கொடுத்து ஏமாந்த விபரத்தை தெரிந்துக்கொண்டேனா என்றால் இல்லை. 1ம் எதிரி சக்திவேல் என்னிடம் வாங்கிய பணத்தை வேறு நபரிடம் கொடுத்து ஏமாந்த விபரத்தை தெரிந்துக்கொண்டு, மறைத்து பொய் சாட்சியமளிக்கிறேன் என்றால் சரியல்ல.

**கு.வி. (2 ம் எதிரி தரப்பில்)**

**குறுக்கு விசாரணை இல்லை என்று வழக்கறிஞரால் சொல்லப்பட்டது.**

# நீதித்துறை நடுவர் நீதிமன்றம்,

# திருவாரூர்

# CC No. 25/2020

2022-ம் ஆண்டு ஏப்ரல் மாதம் 08-ம் நாள் குற்றமுறையீட்டாளர்/எதிரி தரப்பில் சாட்சி அ..சா.39-ன் சாட்சிய வாக்குமூலம் 1969-ம் சட்டத்தின்படி குற்றவியல் நீதித்துறை நடுவர் அவர்களால் ஆணையுறுதி செய்யப்பட்டது.

| | | | |
|---|---|---|---|
| பெயர் | அர்ஜூனன் | வயது | 31/2022 |
| தகப்பனார் பெயர் | மாணிக்கம் | ஜாதி | |
| தொழில் | விவசாயம் | மதம் | |
| ஊர் | 28 நெம்மேலி | தாலுக்கா | பட்டுக்கோட்டை |

**முதல் விசாரணை (அரசு தரப்பில்)**

நான் 28 நெம்மேலியில் வசித்து வருகிறேன். விவசாய வேலை செய்து வருகிறேன். ஆஜர் எதிரிகளை தெரியும். நான் பி.காம்., படித்துள்ளேன். என்னுடைய அண்ணன் நண்பர் மன்னார்குடியை சேர்ந்த ரமேஷ் ஆவார். அவர் மூலமாக 1ம் எதிரி சக்திவேலை தெரியும். கோர்ட்டில் வேலை உள்ளதாகவும், வேலைக்கு முயற்சி செய்கிறாயா என்று ரமேஷ் கேட்டார். மேலும் ரமேஷ் ரூ.1 லட்சம் ரூபாய் முண்பணமாகவும், வேலை கிடைத்த பிறகு ரூ.1 லட்சம் ரூபாய் கொடுக்க வேண்டும் என்று சொன்னார். சக்திவேல் சென்னதாக ரமேஷ் என்னிடம் சொன்னார். உனக்கு நம்பிக்கை இல்லை என்றால் நாளை திருத்துறைப்பூண்டியை சேர்ந்த நபர்கள் பணம் கொடுக்க போகிறார்கள், சென்று பார் என்று என்னிடம் ரமேஷ் சொன்னார். அதனடிப்படையில் திருவாரூரில் உள்ள 1ம் எதிரி இயற்கை அங்காடியில் காலை 9.00 மணிக்கு நான் போய் பார்த்தபொழுது ஜாய்மார்ட்டீன், அவரது சகோதரி ஆகியோர் பணம் கொடுத்தார்கள். அதை நான் பார்த்தேன். என்முன்பாக கொடுத்தார்கள். 1ம் எதிரி 20 ரெயுசிம் பேப்பர்களை எடுத்து காண்பித்தார். எனக்கு வாய்ப்பு இருந்தால் சொல்லும்படியும்,கோர்ட்டில் ஆள் உள்ளதாகவும் 1ம் எதிரி சொன்னார். அப்பொழுது கோர்ட்டில் யாரை குறிப்பிட்டு சொல்கிறார் என்பது எனக்கு தெரியாது. நான் என்னுடைய டாக்குமெண்ட்டை கொடுத்தேன். இரண்டு வேலைதான் உள்ளது என்று 1ம் எதிரி சொன்னார்.

அதனடிப்படையில் மார்ச் மாதம் 16ம் தேதி 2018-ல் ரெசியும் கொடுத்தேன். படிப்பிற்கேற்ற வேலை இருக்காது என்றும், உதவியாளர் போன்ற வேலைக்கு சென்றுவிடு என்று சொன்னார். அதற்கு பிறகு 1ம் எதிரி எனக்கு கால் செய்தார். நாளை காலை 8.30 மணிக்குள் பணம் கொடுத்தால் வேலை கன்பாம் என்றும் பைனல் லிஸ்டு பெயர் வரவேண்டும் என்றால் உடனடியாக பணம் கொடுக்க வேண்டும் என்று சொன்னார். நான் உடனடியாக 1ம் எதிரி வீட்டிற்கு பணத்தை தயார் செய்துக்கொண்டு சென்றேன். இரவு 8.40 மணிக்கு 1ம் எதிரி சூட்கேஸ் மற்றும் ஆவணங்களுடன் சென்னை புறப்பட தயராக இருந்ததாகவும், இரயிலில் ஜட்ஜ் வருவதாகவும் அவரிடம் சொல்லவேண்டும் என்றும் சொன்னார். நான் பணத்தை கொடுத்துவிட்டு திரும்ப வந்துவிட்டேன். பணம் கொடுக்கும்போது 1ம் எதிரி, அவரது மனைவி, அவரது அம்மா, அப்பா ஆகியோர்கள் வீட்டில் இருந்தார்கள். என்னிடம் அழைபேசியில் 15 நிமிடம் 1ம் எதிரி பேசினார். அவர் பணம் கொடுத்த விபரத்தையும் சொல்லியுள்ளார். அந்த விபரம் பதிவு செய்யப்பட்டுள்ளது. அந்த மொபைல் பேன் தற்போது என்வசம் இல்லாததால் மீண்டும் பேசியதை சேகரிக்க முயற்சி செய்து வருகிறேன். அது கிடைத்தவுடன் காவல் துறையில் ஒப்படைக்கிறேன். அதற்கு பிறகு மன்னார்குடிக்கு 1ம் எதிரியும், அவரது மனைவியும் சன்ரைஸ் ஸ்டுடியோவிற்கு வந்தார்கள். அப்பொழுது மூன்று நிமிடம் பேசிக்கொண்டு இருந்தார்கள். அந்த விபரத்தை சரவணன் என்பவர் அவரது மொபைல் போனில் படத்துடன் பதிவு செய்துள்ளார். பின்னர் 1ம் எதிரியிடம் தொடர்பு கொண்டபோது சென்னை உயர்நீதிமன்றத்தில் இருப்பதாகவும், மதுரை நீதிமன்றத்தில் இருப்பதாகவும், ஜட்ஜ் லிவில் இருப்பதாகவும் சொன்னார். நான் வேலையோ, பணத்தையோ திருப்பி கொடுத்துவிடுகிறேன் என்று 1ம் எதிரி சொன்னார். நான் ரமேஷிடம் கேட்டபொழுது 1ம் எதிரி வீட்டிற்கு போகலாம் என்று சொல்லி போனோம். நான் வேலை வேண்டாம் என்று பணத்தை கொடுங்கள்என்று கேட்டேன். அதற்கு அவர் வேலை வந்துவிடும் என்றும் பணம் பெற்றுகொண்டதற்காக 16.03.2019-ல் 1ம் எதிரி 15 நபர்களிடம் பணம் பெற்றுக்கொண்டதற்காக பத்திரம் எழுதி கொடுத்தார். 1 மாதம் காலஅவகாசம் கொடுத்து எழுதி கொடுத்தார். அவர் சொன்னதுபோல நடந்துக்கொள்ளவில்லை. மறுபடியும் நாங்கள் ஆறு நபர்கள் சேர்ந்து 1ம் எதிரியின் வீட்டிற்குள் சென்று பணத்தை கொடுத்தால்தான் செல்வோம் என்று உட்கார்ந்து கொண்டோம். பேசிக்கொண்டு இருந்தபோதே 1ம் எதிரி பைக்கை எடுத்துக்கொண்டு வேகமாக சென்றார். 1ம் எதிரி போறாங்க பிடிங்க என்று சொல்லிவிட்டு நேராக திருவாரூர்

கோர்ட்டிற்கு வந்தார். நாங்கள் கோர்ட் கேட்டிற்கு அருகில் வரும்போது 2ம் எதிரி கோவிந்தலெட்சுமியை 2, 3 போலிசார்கள் இழுத்து வந்தார்கள். அப்போது கேட்டில் பிரச்சனை பெரிதாகிவிட்டதாக சொன்னார்கள். நாங்கள் அதற்கு பிறகு அங்கு நிற்கவில்லை, ஊருக்கு சென்றுவிட்டோம். அதற்கு பிறகு நாங்கள் 7 நபர்கள் மிகவும் கஷ்டபடுகிறோம் பணத்தை கொடுங்கள் என்று கேட்டதற்கு 1ம் எதிரி திருவாரூர் காவல் நிலையத்தில் எங்களுக்கு எதிராக புகார் கொடுத்துவிட்டார். நான் கேட்டில் நிற்கும்போது என்னுடன் ரமேஷ், திருத்துறைப்பூண்டியை சேர்ந்த சுரேஷ் ஆகியோர் இருந்தார்கள். திருவாரூர் லோக்கல் ஸ்டேஷினில் கேஸ் கோர்ட்டிற்கு சென்றுவிட்டது, ஆகவே 1ம் எதிரியிடம் எதுவும் கேட்டவேண்டாம் என்று சொன்னார்கள். திருவாரூர் எஸ்.பி. ஆபீஸில் இருந்து கால் செய்து பணம் கொடுத்த விபரத்தை கேட்டார்கள். பணம் கொடுத்த விபரத்தை சொன்னேன். எஸ்.பி. ஆபீஸில் விசாரித்த பிறகுதான் 83 நபர்கள் உள்ளார்கள் என்று தெரிந்து கொண்டேன், அதுவரை 15 நபர்களுக்கு வேலை என்று நினைத்திருந்தேன். நான் சட்டப்படி நடவடிக்கை எடுக்கலாம் என்று நினைத்தபொழுது சுரேஷ் என்பவர் நான் புகரர் கொடுத்துள்ளதாகவும் அதில் சாட்சியாக விசாரிப்பார்கள் என்றும் நடந்ததை சொல்லுங்கள் என்று சொன்னார். 1ம் எதிரி எங்களுக்கு எழுதி கொடுத்த பத்திரம் ரமேஷ் வசம் சென்று, பின்னிட்டு காவல் துறையினரிடம் உள்ளது. போலிசார் என்னை விசாரித்தார்கள்.

**கு.வி. (1ம் எதிரி தரப்பில்)**

1ம் எதிரி சக்திவேலை எனக்கு எப்படி தெரியும் என்றால் ரமேஷ் மூலமாக எனக்கு தெரியும். அதற்கு முன்பாக சக்திவேலை நான் பார்த்தது இல்லை என்றால் சரிதான். நீதிமன்றத்தில் என்னபிரச்சனை நடந்தது என்றால் நீதிமன்றத்திற்கு வெளியே இவர்களிடம் பணம் கொடுத்ததாக பேசிக்கொண்டார்கள். பிரச்சனையை யார் மூலமாக தெரிந்துக்கொண்டீர்கள் என்றால் திருத்துறைப்பூண்டியை சேர்ந்த சுரேஷ் மூலமாக தெரிந்துக்கொண்டேன். இறுதியாக 1ம் எதிரி சக்திவேல் வீட்டில் யார், யார் போய் உட்கார்ந்து இருந்தீர்கள் என்றால் நான், ரமேஷ், மன்னார்குடியை சேர்ந்த டெய்லர் அவர் அவரது பெண்ணுக்கும் மகனுக்கு ம் பணம் கொடுத்திருந்தார், பேரையூரை சேர்ந்தவர் அவரது மருமகளுக்கு பணம் கொடுத்ததாக வந்திருந்தார். இறுதியாக 1ம் எதிரி சக்திவேல்

வீட்டிற்கு சென்றபோது பத்திரம் புரவெஸ்ஸிங் சென்டரில் தயார் செய்யப்பட்டதா என்றால்அன்றைய தேதியில் இல்லை. பத்திரம் வாங்கப்பட்ட தேதி 09.03.2019 ல் வாங்கப்பட்டது. 1ம் எதிரி 15 லட்சம் வாங்கிக்கொண்டதாக கையொப்பம் செய்தது 16.03.2019 ம் தேதியில் கையெழுத்திட்டு கொடுத்திருக்கிறார். அந்த பத்திரத்தில் யார், யார் கையெழுத்திட்டுள்ளார் என்றால் 1ம் எதிரியின் மனைவி கையெழுத்து செய்து கொடுத்துள்ளார். கோர்ட்டில் 1ம் எதிரி ஆள் இருப்பதாக சொன்னார் என்றால் யார் என்று தெரிந்து கொண்டீர்களா என்றால் ஜட்ஜ்யை தெரியும் என்று சொன்னார். 1ம் எதிரி அரசாங்க வேலையில் இல்லை என்பதை தெரிந்து கொண்டீர்களா என்றால் அவர் அரசாங்க பணியில் இருந்ததாகவும், வேலை வேண்டாம் என்று எழுதி கொடுத்து வந்துவிட்டதாகவும் சொன்னார். அரசு பணியில் இல்லாதவரிடம் எப்படி பணம் கொடுத்தீர்கள் என்றால் பணம் கொடுத்தது தவறுதான், அவர் அவ்வாறு தோற்றத்தை ஏற்படுத்தினார். 2ம் எதிரியை நீதிமன்றத்தில் பார்த்தபொழுது யாருடன் இருந்தார் என்றால் போலிஸ்காரர்கள் இழுத்து வந்தார்கள். சாட்சி தானாக அழைத்து வந்தார்கள். மண்ணெண்ணெய் வாடை வந்தது. நான் அவ்வாறு பார்த்தது மதிய வேலை. 1ம் எதிரி மன்னார்குடியில் பேசியபொழுது என்ன பேசினார் என்றால் நான் உங்களிடம் பணம் வாங்கியது உண்மைதான், ஏமாற்ற மாட்டேன் என்று கூறினார். பணம் யாரிடம் உள்ளது என்று 1வது எதிரியிடம் கேட்டீர்களா என்றால் மதுரை உயர்நீதிமன்றத்தில் ஜட்ஜிடம் உள்ளதாகவும், சென்னை உயர்நீதிமன்றத்தில் ஜட்ஜிடம் கொடுத்துள்ளதாகவும், இறுதியாக மன்னார்குடி அல்லது திருவாரூரில் வேலை வாங்கி தருவதாக சொன்னார். மன்னார்குடியில் உள்ள மகிழா கோர்ட்டில் வேலை வாங்கி தருவதாகவும் சொன்னார். என்னை ரமேஷ்தான் முழுக்க, முழுக்க ஏமாற்றியுள்ளார் என்றால் என்னை 1ம் எதிரிதான் ஏமாற்றியுள்ளார். இந்த வழக்கை யார் தாக்கல் செய்துள்ளார்கள் என்றால் திருத்துறைப்பூண்டியை சேர்ந்த சுரேஷ் என்பவர் கொடுத்துள்ளார். போலிசார் போன் செய்தது எந்த தேதியில் என்றால் ஞாபகம் இல்லை. 1ம் எதிரி சக்திவேல் 2ம் எதிரி கோவிந்தலெட்சுமி தன்னை ஏமாற்றிவிட்டதாக புகார் கொடுத்துள்ள விபரம் தெரிந்துக்கொண்டீர்களா என்றால் இல்லை. 1ம் எதிரி கொடுத்த புகாரை மறைத்து இந்த வழக்கில் பொய் சாட்சியமளிக்கிறேன் என்றால் சரியல்ல.

**கு.வி. (2 ம் எதிரி தரப்பில்)**

போலிசார் என்னை விசாரித்தபோது 2ம் எதிரியை தெரியும் என்றும் நீதிமன்றத்தில் அவரை பார்த்ததாகவும், நீதிமன்றத்தில் நடந்ததாக எனது முதல் விசாரணை மற்றும் 1ம் எதிரியின் குறுக்குவிசாரணையில் கூறியுள்ள சங்கதிகளை சொல்லியுள்ளேன் என்றால் சொல்லியுள்ளேன். நான் அதுபோல் சொல்லவில்லை என்றும் தற்போது போலிசார் கேட்டுக்கொண்டதற்கிணங்க 2ம் எதிரியை தெரியும் என்றும் நீதிமன்றத்தில் நடைபெற்றதாக 2ம் எதிரியை தொடர்புபடுத்தி மிகைபடுத்தி முதன்முதலாக போலிசார் விசாரணையில் சொல்லாமல் நீதிமன்றத்தில் பொய்யாக சாட்சியமளிக்கிறேன் என்றால் சரியல்ல.

**மறுவிசாரணை இல்லை.**